செய்தி வெளியீடு எண் : 1209 நாள் : 20.06.2023

**<u>செய்தி வெளியீடு</u>**

# சென்னை, பட்டினப்பாக்கம் துணை மின் நிலையத்தில் ஏற்பட்ட பழுதை, சரிபார்க்கும் பணியை மாண்புமிகு நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள் பார்வையிட்டார்.

இன்று (20.06.2023) சென்னை, பட்டினப்பாக்கம் துணை மின் நிலையத்தில் ஏற்பட்ட பழுதை, சரிபார்க்கும் பணியை மாண்புமிகு நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள் பார்வையிட்டார். உடன் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக தலைவர் திரு.ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., மேலாண்மை இயக்குநர் (மின் தொடரமைப்பு கழகம்) திரு.இரா.மணிவண்ணன் மற்றும் உயர் அலுவலர்கள் உடன் இருந்தனர்.

19.06.2023 அன்று காலை 08.00 மணியளவில் பெய்த கனமழையின் காரணமாக பட்டினப்பாக்கம் 33/11 கி.வோ. துணை மின் நிலையத்தில் ஒரு 16 எம்.வி.ஏ. திறன் மின்மாற்றியில் ஏற்பட்ட பழுது காரணமாக அந்த மின்மாற்றியில் இணைக்கப்பட்டிருந்த மின் நுகர்வோர்களுக்கு அடுத்த 16 எம்.வி.ஏ. மின்மாற்றியில் இணைக்கப்பட்டு மின்சாரம் வழங்கப்பட்டது.

பட்டினப்பாக்கம் துணை மின் நிலையத்தை ஆய்வு செய்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பழுதான மின்மாற்றிகளை போர்க்கால அடிப்படையில் சரிசெய்து கொண்டிருந்த அலுவலர்கள் மற்றும் பணியாளர்களை விரைந்து பணிகளை முடித்து இயக்கத்திற்கு கொண்டு வருமாறு அறிவுறுத்தினார்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளுக்கு மின் விநியோகம் வழங்கப்படும் 208 துணை மின் நிலையங்களில் 3 துணை மின் நிலையங்களும் 1857 மின் பாதைகளில் 49 மின் பாதைகளும் 35859 மின்மாற்றிகளில் 51 மின்மாற்றிகளும் பழுதடைந்தன. அனைத்து பழுது ஏற்பட்ட பகுதிகளுக்கும் 1 மணி நேர அளவில் மாற்று ஏற்பாடு செய்யப்பட்டு சீரான மின்சாரம் வழங்கப்பட்டது. பழுதான மின்பாதைகள் சரிசெய்யப்பட்டுவிட்டன, பழுதான மின்மாற்றிகள் இன்று மாற்றி அமைக்கப்பட்டுவிடும்.

சென்னையில் தண்ணீர் தேங்கும் இடங்களில் அமைந்துள்ள 4398 பில்லர் பாக்ஸ்கள் உயர்த்தப்பட்டது, 73 பில்லர் பாக்ஸ்களில் உயர்த்தும் பணி நடைபெற்று வருகிறது.

இத்தகைய மழைக்காலங்களில் அனைவரும் மிகுந்த கவனத்துடன் இருந்து உடனுக்குடன் சீரான மின்சாரத்தினை பாதுக்காப்பான முறையில் பொதுமக்களுக்கு வழங்க வேண்டும் எனவும், பொதுமக்களிடமிருந்து புகார் ஏதேனும் வரப்பெற்றால் அதனை அர்பணிப்பு உணர்வுடன் செயல்பட வேண்டும் என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதிகாரிகள் மற்றும் பணியாளர்களையும் அறிவுறுத்தினார்.

**பின்னர், மாண்புமிகு நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் பேசுகையில்,**

ஜூன் மாதத்தில் பெய்து இருக்கக்கூடிய திடீர் கனமழையின் காரணமாக மின் விநியோகம் பழுந்தடைந்திருக்கக் கூடிய இடங்களில் போர்கால நடவடிக்கையில் அவற்றை சீர் செய்ய வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்னிடத்திலே அறிவுறுத்திருக்கிறார்கள். திருவாரூரிலே இருக்கக்கூடிய முதலமைச்சர் அவர்கள் உடனடியாக பாதிக்கப்பட்ட இடங்களுக்கு சென்று பழுதடைந்த மின் மாற்றிகளாக இருந்தாலும் சரி, மின் பாதைகளாக இருந்தாலும் சரி அவற்றையெல்லாம் சரி செய்ய வேண்டுமென்று உத்தரவிட்டுள்ளார்.

பொது மக்களுக்கு தடையின்றி மின்சாரம் வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று எங்களுக்கு அறிவுரை வழங்கியிருக்கிறார்கள். அதனடிப்படையில் 19.06.2023 அன்று காலையில் பெய்த கனமழையின் காரணமாக பட்டினப்பாக்கம் துணைமின் நிலையத்தில் இருக்கக்கூடிய 33/11 கி.வோ. 16 எம்.வி.ஏ மின்மாற்றி பழுதடைந்து அதன் காரணமாக மின் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது. அதற்கு மாற்றாக மற்றொரு 16 எம்.வி.ஏ மின்மாற்றி மூலமாக மின் விநியோகம் வழங்கப்பட்டது, தற்பொழுது அந்த மின் மாற்றியும் பழுதடைந்துவிட்டது. அதன் காரணமாக மின்சாரத்துறை துரித நடவடிக்கை எடுத்து மற்ற பகுதிகளின் மூலம் மாற்று மின்பாதை வழியாக மின்சாரம் வழங்கப்பட்டது. சென்னை மாநகர் மற்றும் புறநகர் பகுதிகளில் மூன்று துணைமின் நிலையங்கள், 49 மின் பாதைகள், 51 மின்மாற்றிகள் மற்றும் 27 பில்லர் பாக்ஸ்கள் பாதிக்கப்பட்டுள்ளது.

மழையின் காரணமாக பாதிப்புகள் ஏற்பட்டிருந்தாலும் மின்வாரிய அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் போர்கால அடிப்படையில் இரவு, பகல் பாராமல் மழையோடே துரிதமாக செயல்பட்டு இரண்டு மணி நேரத்திற்குள் மின் விநியோகத்தை சீரமைத்தனர். தற்போது, பட்டினப்பாக்கம் துணைமின் நிலையத்தில் இன்று நேரில் ஆய்வு செய்தேன். இன்று மாலைக்குள் மின் விநியோகம் முழுவதுமாக சீரமைக்கப்படும். இதே போன்று நகரத்தின் பல்வேறு

பகுதிகளிலும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு உடனடியாக மாண்புமிகு முதல்வர் அவர்களின் உத்தரவின்படி சீரான மின் விநியோகம் வழங்க மின்வாரியம் துரித நடவடிக்கை எடுத்து வருகிறது. இந்த பாதிப்பானது திடீர் மழையின் காரணமாக ஏற்பட்ட மின் பளு மாறுபாடு மற்றும் தொழில்நுட்ப காரணமாக இருக்கலாம்.

தளவாட பொருட்களின் கொள்முதலைப் பொறுத்தவரை இந்த ஆட்சியில் தரத்தில் எந்தவித சமரசமும் ஏற்றுக்கொள்ளப்படாது. இந்த பாதிப்புகளை சரிசெய்ய தேவையான அனைத்தையும் உடனடியாக அளித்து மின் விநியோகத்தை சீரமைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. மின் விநியோகத்தை சீரமைக்க தேவையான அனைத்து தளவாட பொருட்களும் கையிருப்பில் உள்ளது. ஸ்மார்ட் மீட்டர் வாங்குவதற்கான ஒப்பந்தப் பணிகள் நடைபெற்று வருகிறது, இன்னும் இறுதி செய்யப்படவில்லை என தெரிவித்தார்.

பின்னர், மடிபாக்கம் ராம்நகர் பகுதியில் வடிகால் பணிகள் மேற்கொள்ளப்படுவதால் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு சொந்தமான மின்பாதைகள் மற்றும் மின்கம்பிகளை சாலையின் ஓரமாக நகர்த்தும் பணியினை மாண்புமிகு நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு மற்றும் மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா.சுப்பிரமணியன் ஆகியோர் ஆய்வு செய்து மேற்கண்ட பணிகளை போர்கால அடிப்படையில் விரைந்து முடிக்க அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்கள். சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. ச.அரவிந்த் ரமேஷ் உடன் இருந்தார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in